1978 மார்ச் 15]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் பூராவும் பின்தங்கிய மாவட்டம் என்பது தெரியும். மாண்புமிகு உறுப்பினர் இதற்காகத் தனிக் கேள்வி போட்டால் தனியாக விவரங்கள் தெரிந்து கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். அண்ணுமலை : தலைவரவர்களே, குளம் குட்டைகளில் உள்ள வண்டல் மண்ணை விவசாயிகள் எடுப்பதை ரெவின்யூ அதிகாரிகள் தடுக்கிறார்கள். அதைத் தடுத்து நிறுத்தி, விவசாயிகள் அந்த வண்டல் மண்ணை எடுத்துச் செல்ல அனுமதித்தால் அதனுல் ஏரிகளும், குளங்களும் ஆழமாக ஆவதற்கும் வசதியாக இருக்கும். ஆகவே, அரசு அதை அனுமதிக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அது பற்றி அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

திரு. பொ. காளியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களால் பராமரிக்கப்படுகிற ஏரிகளுக்கு சுமார் 5,000 ரூபாய் வரைதான் மதிப்பீடு செய்து அதைப் பராமரிக்கிருர்கள். அதனுல் பெரிய ஏரிகள், கண்மாய்களை மராமத்து செய்ய முடியவில்லை. ஆகவே, அந்த ரூ. 5,000 என்பதை ரூ. 10,000 என்று உயர்த்த அரசு திட்டம் வைத்துள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தனியாகக் கேள்வி போடவும்.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, ஊராட்சி மன்றங்களில் நிதிப் பற்றுக்குறை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனுல் ஊராட்சி மன்றங்களுக்குச் சேரவேண்டிய பல கோடி ரூபாய்கள் வரி வசூல் பாக்கி இருக்கிறது என்று சொல்கிருர்கள். அதை வசூல் செய்ய அரசு முன் வருமா? அதற்குப் போதிய ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவாகளே, எங்கே நிலைமை அப்படி இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னுல் அது பற்றி விசாரித்துப் பரிசீலிக்கலாம்.

ஒழிந்தியாம்பட்டு-கீழ்புதுப்பட்டு சாலை.

*577. வினு—திரு. மொ. பரமசிவம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒழிந்தியாம்பட்டு— கீழ்புதுப்பட்டு செல்லும் பாதை மிகவும் பழுதடைந்து போக்குவரத்துக்குத் தடையாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) இப்பாதையைச் சீரமைக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) தென் ஆற்காடு மாவட்டம் வானூர் பஞ்சாயத்து ஒன்றியத்தில் உள்ள ஒழிந்தியாம்பட்டு—கீழ்ப் புதுப்பட்டு சாலை பழுது பார்க்கப்பட உள்ளது.

(ஆ) வெள்ளநிவாரண நிதி ஒதுக்கீட்டில் இதற்காக ரூ. 92,000 ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

(இ) இந்த வேலை விரைவில் துவங்கப்பட்டுவிடும்,

திரு. மொ. பரமசிவம் : தலைவரவர்களே, இந்த வேலை ஒப்படைக்கப்பட்ட காண்ட்ராக்டர் சரியாக வேலை செய்ய வில்லை. அதனால் அந்த காண்ட்ராக்டர் மேல் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அது பற்றி குறிப்பு இல்லை. ஆனால் சாலை பழுதடைந்திருக்கிறது என்பதும், அதைச் செப்பனிட ரூ. 92,000 ஒதுக்கப்பட்டிருக் கிறது என்பதும் குறித்த விவரம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி இருக்குமானால் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

கோர்வைபுதூரில் முன்னாள் ராணுவ வீரர்களது வீடுகளுக்கு வரி.

*578. வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முன்னாள் ராணுவ வீரர்கள் குடியிருக்கும் ''கோவைப்புதூர்'' காலனி வீடுகளுக்கு வரி விதிப்பிலிருந்து (Exemption from house tax) விலக்கு அளிக்கவேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்திருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) ஆம்.

(ஆ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.